## ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

## ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2020

ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கூடிய ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2020.10.29 ஆகும். இப்போட்டிப் பரீட்சை 2020 நவம்பர் மாதத்தில் நடாத்தப்படும்.

ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்: முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் 111

சம்பள அளவீடு (மாதாந்தம்): பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 ன் MN 2 – 2016 சம்பள குறியீடு இலக்கத்திற்கு ஏற்ப ரூபா.28,940 – 10 x 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 - 47,990/-.

**02. ஆட்சேர்ப்பிற்கான பொதுவான தகைமைகள்:**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்ததன் ஊடாகவோ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை மேற்கொள்ளுவதற்கும் போதுமான உள மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் மற்றும் நன்னடத்தையுடன் கூடியவராக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று ஊவா மாகாணத்திற்குள் குறைந்தபட்சம் பூரண 3 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவினையுடைய விண்ணப்பதாரராக இருக்க வேண்டியதோடு. கிராம அதிகாரியினால் வழங்கப்படுகின்ற குறித்த படிவத்தின் ஊடாக வதிவினை உறுதிப்படுத்தவேண்டும்.

(ஈ) பணிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாவட்டத்திற்கான வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதானால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளில் ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) விண்ணப்பதாரர் அம்மாவட்டத்திற்குள் பிறந்த நபராக இருத்தல் வேண்டும்

அவ்வாறு இல்லாவிடின்

(ii) பரீட்சைக்காக தகைமைகளை பூரணப்படுத்த வேண்டிய இறுதி திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருட காலத்திற்குள் அம்மாவட்டத்தினுள் குறைந்தபட்சம் தொடர்ச்சியாக மூன்று (03) வருடங்கள் வதிவினை உடைய நபராக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு இல்லாவிடின்

(iii) அவர் தொடர்ந்து 05 வருடங்கள் அம்மாவட்டத்தினுள் இரண்டாம் நிலைக்கல்வியினை பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு: எவராயினும் விண்ணப்பதாரர் ஒருவரின் தந்தை அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் செய்யக்கூடிய பணியில் கடமையாற்றுகின்றார் எனின் அவ்விண்ணப்பதார தமது தந்தை அல்லது தாயின் பிறந்த இடத்தினை தான் உரித்தான மாவட்டமாக தேர்ந்தெடுப்பதற்காக அனுமதி அளிக்கப்படும்.

எவராயினும் பரீட்சைதாரர் ஒருவருக்கு ஒரு மாவட்டத்திற்கு மேலதிகமான எண்ணிக்கையிலான வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்காக அனுமதி வழங்கப்படமாட்டாது. போட்டியிடுவதற்கு மாவட்டத்தினை தேர்ந்தெடுத்த பின் அதனை மீண்டும் மாற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

(iv) இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவை என இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியன்று சகல முறைகளிலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) வயது: விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும்.

**03. கல்வி தகைமைகள் :**

சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் மற்றும் கணிதம் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கா.பொ.த (சா/த) பரீட்சையில சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் (பொது பரீட்சை தவிர்ந்து) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். பழைய விடய ஆய்வின் கீழ் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

**04. சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(அ) இப்பதவியானது நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. ஓய்வூதிய முறைப்பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

(ஆ) ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர்கள் ஊவா மாகாணத்தின் எந்தவொறு பிரதேசத்திலும் கடமையாற்ற உடன்பட வேண்டும்.

(இ) அரச கரும மொழி அல்லாத மொழியில் பணிக்கு அமர்த்தப்பட்ட உத்தியோகத்தர் சேவையினை நிரந்தரப்படுத்துவதற்கு முன்னர் ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் முகாமைத்துவ சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர் அரசாங்க சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் விதப்புரைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**05. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

வெற்றிட எண்ணிக்கையில் 70% வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் வெளிவாரியான விண்ணப்பதாரர்களினால் பூரணப்படுத்தப்படும். திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் முன்னுரிமை அடிப்படையில் நடாத்தப்படும் சான்றிதழ் பரிசீலனை செய்யும் நேர்முகப் பரீட்சையின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

பணிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஊவா மாகாணத்தின் ஒவ்வொறு மாவட்டத்தினதும் சன தொகைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொறு மாவட்டத்திற்கும் வெற்றிட எண்ணிக்கையின் குறிப்பிட்ட எண்ணிக்கை ஒதுக்கப்படும். ஒரு மாவட்டத்தில் பூரணப்படுத்த வேண்டிய வெற்றிட எண்ணிக்கைக்காக போட்டியிடுவதற்கு தகைமை வாய்ந்தவராக அம்மாவட்டத்தில் விண்ணப்பித்த விண்ணப்பதாரர் மாத்திரம் கருதப்படுவர்.

ஒரு மாவட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட விதத்தில் ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கை அம்மாவட்டத்திற்காக விண்ணப்பித்த தகைமைவாய்ந்த விண்ணப்பதாரர்களினால் பூரணப்படுத்தப்பட முடியாத சந்தர்ப்பங்களில், அவ்வெற்றிட எண்ணிக்கை ஏனைய மாவட்டத்திற்கு பெற்றுத் தரப்படும்.

பூரணப்படுத்துவதற்கான வெற்றிட எண்ணிக்கை குறைந்த எண்ணிக்கையாயின் அக்காரணதின் அடிப்படையில் மாவட்ட சன தொகையை அடிப்படையாக கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் திறன் அடிப்படையில் தகைமைவாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பரீட்சையின் போது தேவையான குறைந்தபட்ச புள்ளிகளை பெற்றுக்கொண்ட எண்ணிக்கை நிலவும் வெற்றிட எண்ணிக்கையை விட குறைவாக காணப்படும் சந்தர்ப்பத்தில் மாவட்ட சன தொகை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## 06. விண்ணப்பிக்க வேண்டிய முறை:

விண்ணப்பப்படிவம் www.psc.up.gov.lk வலை பக்கத்தின் ஊடாக online முறையில் முன்வைக்கப்பட வேண்டியதோடு, அதன் அச்சு பிரதி விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தியதன் பின்னர் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு online முறையில் விண்ணப்பப்படிவத்தை முன்வைக்க இயலாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரையிலான பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 05 தொடக்கம் 09 வரையிலான தகவல்கள் இரண்டாம் பக்கத்திலும் ஏனையன மூன்றாம் பக்கத்திலும் காணப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தினை தயார்செய்ய வேண்டியதோடு, ஒவ்வொரு தலைப்பும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே பூரணப்படுத்துதல் வேுண்டும். விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமர்வதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணமாக்கப்பட வேண்டும். தமிழ் மொழியில் முன் வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பானது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

- தாங்கள் உரித்தாகும் மாவட்டம் "பதுளை" அல்லது "மொணராகலை" என விண்ணப்பப்படிவத்தில் A யில் தெளிவாக குறிப்பிடுக.
- தாங்கள் பரீட்சைக்கு தோற்றும் நகரம் பதுளை / ஹாலிஎல / பண்டாரவளை / மொணராகலை/ வெல்லவாயை என இரண்டு விருப்புக்களையும் மற்றும் அதற்குரிய இலக்கத்தினையும் விண்ணப்பப்படிவத்தில் B இல் குறிப்பிடுக.
- தாங்கள் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் மற்றும் அதற்கான இலக்கம் விண்ணப்பப்படிவத்தில் C இல் குறிப்பிட வேண்டும்.
- முதலெழுத்தினை இறுதியில் இட்டு முதலெலுத்துடன் பெயர் ஆங்கில பெரிய எழுத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
    - உ.த.: PERERA A.B.C. (இதில் Mr./ Mrs./ Miss. ஆகிய சொற்களில் தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக).

online முறையில் விண்ணப்பித்த பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட அச்சுப்பிரதியில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தியதன் பின்னர் அப்பிரதியினை அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள உபதேசங்களுக்கு ஏற்ப பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2020.10.29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **"செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பீலிபொதகமை வீதி, பிங்கராவை, பதுளை"** என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது மேல் மூளையில் **"ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020"** என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

## 07. கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரினால் / சமாதான நீதவான் ஒருவரினால் / சத்திய பிரமாண ஆணையாளரினால் / பொது நொதாரிஸ் / முப்படையின்

அதிகாரம் உள்ள அலுவலர் / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள பொலிஸ் சேவையின் அலுவலர்/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியினை வகிக்கும் நிறைவேற்று மட்ட அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிதல் வேண்டும்.

**08. பரீட்சை கட்டணம்:**

பரீட்சை கட்டணம் ரூபா. 900/- ஆகும். இத்தொகையை ஊவா மாகாண பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கப்படும் வகையில் ஊவா மாகாணத்தில் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் காரியாலயத்திலும் பணமாக செலுத்தி அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் முதல் பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டியது கட்டாயமாகுவததோடு, தேவை கருதி அதன் நிழல்பிரதியினை தம்மிடம் வைத்திருத்தல் எதிர்கால நடவடிக்கைகளுக்கு பயன்தக்கதாகும். ஊவா மாகாண பிரதேச செயலாளர் காரியாலயமொன்றில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டிற்கு புறம்பாக வேறு நிறுவனங்களில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளைகள் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன், எந்தவொறு காரணத்திற்காகவும் இப்பரீட்சை கட்டணமானது திருப்பி செலுத்தப்படமாட்டாது.

09. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு இவ்வறிவித்தலின் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் பரிசீலனையின்றி பரீட்சைக்கு அமர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சையில் அமர்வதற்காக அனுமதிப் பத்திரம் வழங்குதல் விண்ணப்பதாரர் குறித்த பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் எனக் கருதப்பட்படமாட்டாது. நேர்முக பரீட்சையின் போது தேவையான தகைமைகளை பூரணப்படுத்தாமை தெரியவந்தால் அவ்விண்ணப்பதாரி நியமனத்தினை பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவராக கருதப்படும்

10. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சை பிரிவின் ஊடாக அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் முழு பரீட்சைக்காகவும் ஒரு மொழி மூலத்திலேயே அமர வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை முன்வைத்த பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களாவன பதுளை, ஹாலிஎல, பண்டாரவளை, மொணராகலை மற்றும் வெல்லவாயை ஆகும்.

11. பரீட்சை தினத்தன்று பரீட்சார்த்தியின் ஆள் அடையாளத்தை சான்றுப்படுத்துவதற்காக ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுப்படியாகும் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுப்படியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு அல்லது செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் முன்வைக்கப்பட வேண்டும். இவ்வாவணங்களுக்கு புறம்பாகு வேறு ஏதேனும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**12. போட்டிப் பரீட்சையின் விடய ஆய்வு:**

இப்பரீட்சையானது வினாத்தாள் 02 ன் கூடியதாகும். பரீட்சார்த்தியின் கடமை பொறுப்பு நடவடிக்கைகளுக்கான திறைமைகளை பரீசீலனை செய்யும் முகமாக இப்பரீட்சைத்தாள் அமையும்.

| வினாத்தாள் | | காலம் | மொத்த புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | மொழித் திறமை | 2½ மணித்தியாலம் | 100 | 40% |
| 2 | நுண்ணறிவு | 1 மணித்தியலம் | 100 | 40% |

மொழித் திறன்: இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் கருத்து தெறிவிப்பு கிரகித்தல், இலக்கனம், எழுத்துப்பிழை, மொழி மற்றும் கட்டுரை, தரப்பட்ட கடிதத்தினை வரைதல், தரப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு வரைபு மற்றும் அட்டவணை தயாரித்தல், தரப்பட்டுள்ள பந்தியினை சாராம்சம் செய்தல். தரப்பட்டுள்ள சொற்கள் பலவற்றின் கருத்துக்களை தனி எழுத்தாக எழுதுதல் மற்றும் இலகுவான இலக்கன பயன்பாடு பற்றிய அறிவை பரீசீலனை செய்யும் விடயத்துடன் தொடர்புடைய வினாக்களுடன் கூடியதாக அமையும்.

| | |
|---|---|
| நுண்ணறிவு | இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் எண்ணியல் திறன், தர்க்கத்திறன் பொது அறிவினை அளவிடுவதற்கான விடயம் தொடர்பான வினாக்களுடன் கூடியதாக அமையும். |

குறிப்பு:

சகல எழுத்து மூல விடைப்பத்திரம் தொடர்பில் தெளிவற்ற கையெழுத்து மற்றும் சொற்களின் எழுத்துப் பிழைகள் தொடர்பில் புள்ளிகள் குறைக்கப்படும். நியமனம் பெற்றுக்கொள்ளுவதற்கான தகைமையினை பெற்றுக்கொள்ளுவதற்கு ஒவ்வொரு பாடங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தப்பட்சம் 40% மான புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ள வேண்டிதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் 50% வது பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் மத்தியில் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும் வரிசைகிரம முன்னுரிமை அடிப்படையில் தகைமை வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**13. பொய்யான தகவல்களை வழங்குதல்:**

இப்பரீட்சையில் அமர்வதற்காக பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமை இல்லை என தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைப்பெறும் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்பத்திலோ அவரின் பரீட்சை உரிமை இரத்து செய்யப்படுவதற்கு இயலும். சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர் வழங்கிய யாதேனும் தகவல் பொய்யானதாக அல்லது வேண்டுமென்ரே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என தெரிய வந்தால் அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்ரே மறைத்துள்ளார் என தெரிய வந்தால் அவரின் சேவையானது முன் அறிவித்தல் இன்றி முடிவுறுத்தப்படும்.

**14.** இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் / ஆட்சேர்ப்பு செய்யாமலிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையினது ஒரு பகுதியினை நிரப்புதல் அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்ப்பில் அல்லது இது தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்ப்பில் இறுதித் தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோல இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்ப்பில் விவரித்தல் / தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக மேற்கொள்ளப்படும்.

காமினி மஹிந்தபால ஜோபியஸ்
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2020.09.28 ம் திகதி
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு
பதுளை.